**செய்தி வெளியீடு எண்:175** **நாள் : 28.03.2016**

**உரிய ஆவணங்கள் இல்லாத பணம் ரூ.14.73 கோடி மற்றும் தங்ககட்டிகள் பறிமுதல் – 2,36,124 புகார்கள் மீது உடனடி நடவடிக்கை – சுவர் விளம்பரங்கள் அழிக்கப்பட்டன.**

********

தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலையொட்டி, தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. தேர்தல் பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழுவினர் ஆகியோர் தொகுதி முழுவதும் கண்காணித்து, உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற பணம், பரிசுப்பொருட்கள் என சந்தேகப்படுபவைகளை பறிமுதல் செய்து வருகின்றனர்.

இதன்படி, பறக்கும் படையினர் 26.03.2016 அன்று சோதனையின்போது, உரிய ஆவணங்கள் இல்லாமல் கோவை மாவட்டத்தில் கொண்டு சென்ற ரூ.1.10 லட்சம், தூத்துக்குடியில் ரூ.1.15 லட்சம், நாமக்கல் மாவட்டத்தில் ரூ.15.11 லட்சம், ஈரோட்டில் ரூ.10 லட்சம், விருதுநகரில் ரூ.1.99 லட்சம், கோவை மாநகரில் மொத்தம் 1753.98 கிராம் அளவில் 8 தங்கக்கட்டிகள், மதுரை மாநகரில் மதுவகைகள் போன்றவை பறிமுதல் செய்யப்பட்டன. 26.03.2016 முடிய மொத்தம் ரூ.6,70,66,555/– ரொக்கம் கைப்பற்றப்பட்டது.

இதே போன்று, நிலையான கண்காணிப்புக்குழுவினர் சோதனை மேற்கொண்டபோது, ஈரோட்டில் ரூ.1.63 லட்சம், நீலகிரி மாவட்டத்தில் ரூ.2 லட்சம், நாமக்கல் மாவட்டத்தில் ரூ.3.87 லட்சம், கன்னியாகுமரியில் ரூ.6.30 லட்சம் உட்பட மொத்தம் ரூ.14.70 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. நிலையான கண்காணிப்புக்குழுவினரால் 26.03.16 வரை பறிமுதல் செய்யப்பட்ட மொத்த தொகை ரூ. 8,02,05,053/– ஆகும்.

மேலும், பொதுச் சுவர்களில் அனுமதியில்லாமல் விளம்பரம் எழுதியது, கட்சி பெயர் கொண்ட போர்டை நிறுவியது உட்பட பல்வேறு விதிமீறல்கள் தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. பறக்கும் படையினர் மூலமாக இதுவரை தேர்தல் விதிமுறை மீறியதாக மொத்தம் 150 வழக்குகளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

28.3.16 வரை தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாகவும், பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்தாகவும் பெறப்பட்ட 1,90,192 புகார்களில், 1,77,402 புகார்களிலும், சுவர் விளம்பரம், போஸ்டர், பேனர் வைத்து தனியார் சொத்துக்கு சேதம் விளைவித்ததாக பெறப்பட்ட 70,666 புகார்களில் 58,722 புகார்களிலும் சுவர் விளம்பரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**